20.04.2020

## கல்வியாளர்கள் கவனத்திற்கு

# இணையவழித் தமிழாய்வு உரைத்தொடர்

இணையவழிக் கற்றல்- கற்பித்தல் அணுகுமுறை தற்போதைய தகவல் தொடர்புக் காலத்தில் தவிர்க்க இயலாத கல்விச்செயல்பாடாக மாறியுள்ளது. ஆசிரியர்களும் மாணவர்களும் இணையவழிக் கல்வி எனும் உலகளாவிய இவ்வணுகுமுறையின் நற்பயன்களைப் பயின்றுணரவும், இதில் ஊக்கம் பெறவும், நமது தேவைக்கான பயிற்சித் தளமொன்றை உருவாக்கிக்கொள்வதற்கான தொடக்க முயற்சியாகவும், கொரோனா நோய்த்தொற்றைத் தடுக்க நடைமுறையிலுள்ள ஊரடங்குக் காலத்தில் கற்றல்-கற்பித்தலைத் தொடர நல்வாய்ப்பாகவும் **'இணையவழித் தமிழாய்வு உரைத்தொடர்'** நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட உள்ளது. கல்வியாளர்களும் மாணவர்களும் பயனுறும் வகையில் இத்தொடர் துறைசார் வல்லுநர்களைக்கொண்டு நிகழ்த்தப் பெறும். ஒவ்வொரு உரையும் ஒரு மணி கால அளவில் வாரத்தில் மூன்று உரைகள் (காலை 11 மணி முதல் பகல் 12 மணி வரை) அமையும்.

தொடக்க முயற்சியாக, முகநூலின் (Facebook) தளத்திலுள்ள காணொலி நேரலை வசதி வழி இவ்வுரைத்தொடரை செயல்படுத்தலாம் எனவும் நாளடைவில் இணையக்கல்விக்கெனவே உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள்களைப் பயன்படுத்தலாம் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒருவர் இத்தொடரைப் பார்க்க முகநூலில் கணக்கு வைத்திருக்க வேண்டும். முகநூல் கணக்கை இதுவரை தொடங்காமல் இருப்பவர்கள் ஆண்டராய்ட் செல்பேசி வழி அல்லது கணிணி வழி தங்கள் கணக்கைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வை ஒருங்கிணைக்க

முனைவர். இரா.காமராசு, பேராசிரியர், மொழிப்புலத் தலைவர் (கூட்டுநர்),

திரு. ச.பாஸ்கரன், இணைப்பேராசிரியர் & தலைவர், கணிப்பொறி அறிவியல் துறை,

முனைவர். வீ.செல்வகுமார், இணைப்பேராசிரியர் & தலைவர், கடல்சார் வரலாறு & கடல்சார் தொல்லியல் துறை ஆகியோரைக் கொண்ட குழு இதன்வழிஅமைக்கப்படுகிறது.

இக்குழு மறு ஆணை வரும் வரை செயல்படும். தொடர் உரைகளுக்கான வல்லுநர்களை இக்குழு அடையாளம் கண்டு துணைவேந்தர் இசைவுபெற்று நிகழ்வைத் திட்டமிட்டு நடத்தும். கேள்விகாட்சி மைய தொழிநுட்பாளர்கள் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குவார்கள். இந்நிகழ்வு தொடர்பான ஐயங்களுக்கு முனைவர் வீ.செல்வகுமார் (9940946086, 9442112601) அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இம்முயற்சியின் நோக்கம், திட்டங்கள் பற்றிய தொடக்கவுரை 21.04.2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தமிழ்ப் பல்கலைக்கழக முகநூல் பக்கம் (https://www.facebook.com/thetamiluniversity/) வழியாக அமையும். இத்தொடக்கவுரை இந்நிகழ்வின் வெள்ளோட்டமாகவும் அமையும். எனவே, முகநூல் இணைப்பில் முதல் முறையாக பங்கேற்கும்பொழுது நிகழக்கூடிய தொடக்க நிலைத் தடுமாற்றங்கள் சிக்கல்கள் ஏதேனும் இருப்பின் எவ்விதத் தயக்கமுமின்றி கேள்விகாட்சி மைய தொழில் நுட்பாளர்களுடன் (திரு பால்ராஜ்: அலைபேசி வழி தொடர்பு கொண்டு உடன் சரி செய்து கொள்ளலாம். இது நமக்கு நாமே அமைத்துக்கொள்ளும் திட்டம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

முதல் உரை 22.04.2020 (புதன் கிழமை) முற்பகல் 11 மணி முதல் – பகல் 12 மணி வரை அமையும்.

சொற்பொழிவாளர்: **பேரா. பா. மதிவாணன்(பணி நிறைவு), தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

தலைப்பு: ஆராய்ச்சி நெறிமுறைகள்

முதல் உரைக்கான முகநூல் முகவரி: https://www.facebook.com/balasundaram.mathivanan.3/

உரை தொடங்குவதற்கு 10 நமிடங்களுக்கு முன்னர் இணைப்பில் வரவேண்டும். இந்நிகழ்வு பற்றிய கூடுதல் தகவல்கள் அவ்வப்பொழுது தெரிவிக்கப்படும். இவ்வுரைதொடரைப் பார்த்துப் பயன்பெற இத்தகவலை மாணவர்களுக்குத் தெரிவிப்பதற்கான (கட்செவி/மின்னஞ்சல்/குறுஞ்செய்தி வழியாக) நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறைத்தலைவர்களும் ஆசிரியர்களும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- துணைவேந்தர்